
# பாலராமர் சிலை: ஆகம விதிகள் எங்கே? ஆச்சாரம் எங்கே?

அயோத்தியில் இராமர் கோவில் திறப்பு விழா என்ற பெயரில், நடந்த நிகழ்ச்சியில் விழா நாயகன் இராமரைவிட நமது பிரதமர் மோடி மீதுதான் நாடெங்கும் விளம்பர வெளிச்சம் பெரிதாகப் பாய்ச்சப்பட்டது! **ஆகா... அந்த விழாவிற்கு முன்பும், அன்றும் அவர் நடித்துக் காட்டிய நாடகங்களைப் பார்த்த நாடு, அசந்துபோய் நின்றது! நடிப்புக்கு இலக்கணம் வகுத்த நடிகர், நடிகை எல்லாம் நமது பிரதமரின் நடிப்பின் முன் மண்டியிட வேண்டும்! அத்தனை தத்ரூப நடிப்பு! அவரது நடை, உடை, பாவனை எல்லாமே கடந்த சில தினங்களாக நடிப்பின் உச்சகட்டத்தைத் தொட்டு நின்றன!**

இராமர் சிலை பிரதிஷ்டைக்கு அழைப்பு விடுத்து; வந்த இந்தியாவின் சூப்பர் ஸ்டார்களெல்லாம் அங்கு சென்று பிரதிஷ்டை செய்யப்பட்ட இராமரைப் பார்த்து தரிசிக்க இயலாவிடினும், பூசாரியை நேரடியாகப் பார்த்து தரிசித்தது போல, மோடியை தரிசித்துப் பரவசம் கொண்டனர்!





பொதுவாக ஊடகங்களில் கோவில் விழாக்களை நேரடி ஒளிபரப்பு நிகழ்த்தும்போது, அந்தக் கோவிலின் ஸ்தல புராணம், அங்கு எழுந்தருளியுள்ள இறைவனின் அருமை பெருமைகளைத் தான் வருணிப்பர்! ஆனால் அன்று ஸ்தலபுராணத்தைவிட, எழுந்தருள இருக்கும் இராமரின் புகழைவிட, நமது பிரதமர் மோடி அவர்களின் ஒவ்வொரு அசைவுமே பெரிதுபடுத்திக் காட்டப்பட்டது.

**விழா நாளன்று மட்டுமல்ல; விழாவுக்கு பல நாட்கள் முன்பிருந்தே மோடி அவர்கள் ஒற்றை ஆளாக நின்று தண்ணீர் தெளித்து சுத்தம் செய்வது, தனிமனிதனாக நீராடுவது, இந்தியாவின் முக்கியப் பிரமுகர்கள் பலரும் எங்கோ ஒரு மூலையில் அமர்ந்திருக்க, நமது பிரதமர் மோடி தனக்குரிய பாதுகாப்பு வளையங்களை மீறி அவர்களை தொலைதூரத்துக்குத் தள்ளிவிட்டு தனிமனிதனாக கோவிலுக்குள் பூஜை புனஸ்கார சாமான்களை ஏந்தி, பக்தி நனி சொட்டச் சொட்ட அவர் நடந்து செல்வது போன்ற காட்சிகளை முன்னிறுத்தி, நாட்டின் பெரும்பகுதியான ஊடகங்கள் மோடியை பூரிக்கச் செய்ய விளம்பர வெளிச்சம் பாய்ச்சி நின்றன!**

இராமர் சிலை இருந்த இடத்தில் மோடியும், ஆர்.எஸ்.எஸ். தலைவர் மோகன் பகவத், உ.பி. முதலமைச்சர் யோகி ஆதித்யநாத், உ.பி. ஆளுநர் ஆனந்திபென் படேல் மட்டுமே அனுமதிக்கப்பட்டிருந்தாலும், மோடிக்கும், மோகன் பகவத்துக்கும் தரப்பட்ட முக்கியத்துவத்தை மற்றவர்களுக்கு, தூர்தர்ஷன் ஒளிபரப்பு தந்திடவில்லை; என்பதை நேரலையில் பார்த்தவர்கள் உணரமுடியும்!

**முழுவதுமாக கட்டி முடிக்கப் படாத நிலையில், அங்கே ராமர் சிலையை வைப்பதற்கு பலர் கண்டனம் தெரிவித்தனர்! அவை எல்லாம் யார் காதிலும் ஏறவில்லை! ஏறவில்லை என்றுகூட கூற முடியாது; ஏறாதது போல நடித்தனர்!**

**ஆகம விதிகளின் படி அந்த இராமர் சிலை அயோத்தி கோவிலில் பிரதிஷ்டை செய்யப்பட்டதா? என்பதே இன்று பலர் மனதிலும் எழுந்துள்ள கேள்வி! ஆகம விதிகள் மீறப்பட்டால் கொதித்தெழும் ஆரிய சமாஜம் போன்றவை, இராமர் சிலை பிரதிஷ்டையில் ஒரு அப்பட்டமான அத்துமீறல் நடைபெற்றுள்ளதை கண்டுகொள்ளாதது ஏன் என்பதும் இங்கு எண்ணிப் பார்த்திட வேண்டிய ஒன்றாகும்!**

ஒரு கற்சிற்பம் கடவுளாவதற்கு பலவழி முறைகள் பின்பற்றப்பட வேண்டும் என்பதை, சிலை வடிக்கும் சிற்பிகள் மட்டுமல்ல, ஆன்மிக நம்பிக்கை கொண்டவர்களும் பலமுறை விளக்கியுள்ளனர்.

**“கருங்கல் ஒன்று சிற்பமாவது சாதாரண விஷயமல்ல...”**

**சிலைக்கே ஏகப்பட்ட விதிகள் என்றால் வழிபடக்கூடிய மூலவராக உருவாகும் கற்சிற்பத்தை அதனை வடித்த உடன் அப்படியே கொண்டுபோய் பிரதிஷ்டை செய்துவிட முடியாது.**

சிலைகளை ஸ்தாபிக்கும் அந்த தெய்வீக வழிமுறைகளைப் பற்றி, கீர்த்திவர்மன் ஸ்தபதி அவர்கள் கூறும்போது,

“சிற்ப சாஸ்திரம், ஆகம விதிகளின்படி உருவாகும் கடவுள் சிலைகள் முதலில் சுத்தம் செய்யப்பட்டு ஒரு நல்ல நாளில் ஜலவாசத்தில் வைக்கப்படுகிறது!

ஜலவாசம் என்பது மூன்று புண்ணிய நதிகளின் நீரையும், முக்கிய தீர்த்தங்களின் நீரோடு, கடவுள் சிலை எங்கே வைக்கப்பட இருக்கிறதோ அந்த இடத்தில் ஓடும் நதியின் தீர்த்தத்தையும் சேர்த்து, புதிதாக உருவாக்கப்பட்ட சிலையை ஒரு மண்டலம், அதாவது 48 நாட்கள் அமிழ்த்தி வைக்க வேண்டும் (அந்த சிலைக்குள் நீர் நுழைந்து,


சிலந்தி

அதன் காரணமாக நீர்க் குமிழிகள் வெளியே வந்தால் அந்தச் சிலை பின்னமான சிலை எனக் கருதப்படும். அது வழிபடத்தக்கது அல்ல!)

இதனைத்தான் ‘ஜலவாசம்’ என்று கூறுகின்றனர். இப்போது அயோத்தியில் நிறுவப்பட்டுள்ள ராமர் சிலை அத்தகைய ஜலவாசத்துக்கு ஆட்படுத்தப்பட்டதாக எந்தத் தகவலும் இல்லை!

அது மட்டுமல்ல; 48 நாட்கள் ஜலவாசத்திலிருந்து சிலையை எடுத்து, அது பின்னமானதாகக் கருதப்படவில்லை என்றால் மீண்டும் அந்தச் சிலையை, அந்தச் சிலை மூழ்கும் அளவு நவதானியங்களைக் கொட்டி அதனை மேலும் ஒரு மண்டலம் (48 நாட்கள்) வைக்க வேண்டும். இதனை தான்யவாசம் என்கின்றனர்! இந்த இரு வாசமும் முடிந்த பின்னர் ரத்னவாசம் (அதுவும் 48 நாட்கள்)! அதாவது அந்தச் சிலையை நவரத்னங்களில் மூழ்க வைக்க வேண்டும்! அதன் பின்னர் பொற்காசுகளால் மூடப்படும் தன வாசம், அடுத்து வஸ்தர வாசம் எனப் பல வாசங்களுக்கு அந்தச் சிலை உட்படுத்தப்பட்டு மொத்தம் 288 நாட்கள் வைக்கப்படும்! அதன் பின்னர்தான் கற்சிலை தெய்வமாகிறது என ஆகம, சாஸ்திர, சம்பிரதாயங்களில் கூறப்படுகிறது! அதன் பிறகும் சில சாத்திர சம்பிரதாயங்கள் கடைப்பிடிக்கப்பட்ட பின்தான் அந்தக் கற்சிலை கடவுளாக மாறுகிறது.

கல்லை வடித்து பொது இடத்தில் வைத்தால் அது சிலை; அதுவே இத்தனை இத்தனை புனிதவழிகளால் மேம்படுத்தப்பட்டால் தான் அது வணங்கும் கடவுளாக மாறுகிறது” - என ஆன்மிகம் கூறுவதாகத் தெரிவிக்கிறார்!

**இப்போது அயோத்தியில் பிரதிஷ்டை செய்யப்பட்ட பாலராமர் சிலை, மேலே குறிப்பிடப்பட்ட சாஸ்திரம், சம்பிரதாயங்கள் அனுஷ்டிக்கப்பட்டு நிறுவப்பட்ட ஒன்றா?**

ஆறு ஏழு மாதங்களில் இந்த பாலராமர் சிலையைச் செதுக்கி முடித்ததாக மைசூரைச் சேர்ந்த சிற்பி அருண் யோகிராஜ் ஒரு பேட்டியில் (நியூஸ்18) கூறியிருப்பது இங்கு கவனிக்கத்தக்கது!

சிலை தேர்ந்தெடுக்கப்பட்ட உடன், அது அறிவிக்கப்பட்டு சில தினங்களில் அயோத்தி வந்தடைந்த செய்தியும் ஏடுகளில் தெளிவாக வந்தன! அந்தச் சிலை கடவுள் வடிவம் பெறத் தேவையான ஜலவாசம், தான்யவாசம் போன்ற ஆறு வாசங்கள், அதாவது ஆறு மண்டலங்கள், விளங்கக் கூற வேண்டுமானால், மண்டலத்துக்கு 48 நாட்கள் என்ற கணக்கில், ஆறு மண்டலங்களுக்கு 288 நாட்கள் எங்கும் வைக்கப்பட்டதாகச் செய்திகள் இல்லை! சாஸ்திர சம்பிரதாயங்கள் குறித்து அதன் வல்லுநர்கள் கூறும் எதுவும் அனுஷ்டிக்கப்படாத நிலையில், அயோத்தியில் வைக்கப்பட்டுள்ள ராமர் சிலை, வெறும் சிலையாகத்தான் இருக்கிறதே தவிர, அது கடவுளுக்கான தகுதிகளைப் பெறவில்லை என்பது உறுதியாகிறது!



**பாலராமர் சிலை வடித்த சிற்பி அருண் யோகிராஜ்**

**இது குறித்து ஆரிய சமாஜங்கள், இந்து சமய ஆச்சாரியார்கள் யாரும் இதுவரை வாயையே திறக்கவில்லை! ராமர் கோவில் மட்டும் முழுமை பெறாமல் இல்லை; அங்கு பிரதிஷ்டை செய்யப்பட்ட விக்ரகமும் முழுமைப் பெறவில்லை! இதுபோன்ற ஒரு கோவில் திறப்புவிழாவும், பிரதிஷ்டை நிகழ்ச்சியும் தமிழ்நாட்டில் நடைபெற்றிருந்தால் ஆரியக் கூட்டமும்; அதன் அடிவருடிக் கூட்டமும் எத்தனை கூப்பாடு போட்டிருக்கும்?**

எண்ணிப் பாருங்கள்! அமைச்சர் நிர்மலா சீத்தாராமன் முதல், ஆளுநர் ரவி உட்பட வலது சாரிகள் அத்தனை பேரும் எத்தனை குதி குதித்திருப்பார்கள்! அங்கே தான் தென்படும் ஆரியத்தின் சூழ்ச்சி வலை! அந்த வலைகளை அறுத்தெறிய எழுச்சிபெற்று எழுவோம்!